DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

ST C.No.1784 /2019

Deposition of Witness : LW5 /PW6

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பிரகாஷ் | Taluk | |
| Father's Name | திரு.பெரியசாமி | Caste | |
| Village | | Calling | |
| Age | | Religion | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 16.11.2023 | | | |

(Accused absent)

சாட்சியை காடாம்புலியூர் காவல் நிலைய முதல் நிலை காவலர் திரு.L. சந்திரசேகர்(Gr.I 379) அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை-**

நான் தற்போது பி.ஆண்டிகுப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி பாரதிதாசன் எனது அண்ணன். பட்டியல் சாட்சிகள் செல்வராஜ், வசந்த், தமிழ்செல்வன் ஆகியோர்களை தெரியாது. வழக்கின் எதிரியை தெரியாது. எனக்கு வழக்கு விபத்து சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள். அப்போது நான் அவர்களிடம் நான் வழக்கு விபத்து சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று கூறினேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

போலிசார் என்னை வழக்கு விபத்துசம்மந்தமாக விசாரித்தபோது நான் போலிசாரிடம் கடந்த 29.10.2016 அன்று இரவு சுமார் 19.30 மணிக்கு நானும், எனது அண்ணன் பாரதிதாசனும் பண்ருட்டி சாத்திப்பட்டு ரோட்டில் பி.ஆண்டிகுப்பம் ஜோதிராமலிங்கம் திருமண மண்டபம் அருகே நின்றுயிருக்கும் போது பின்னால் விசாரித்து தெரிந்த வசந்த் தனது TN-31-BM-5373 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் தமிழ்செல்வன் என்பவரை உட்காரவைத்து கொண்டு கிழக்கிலிருந்து மேற்குநோக்கி சாலையின் தெற்கு பக்கம் இடதுகை ஓரமாக வரும்போது TN-31-AB-4999 என்ற டாடா இன்டிகா காரை அதன் ஓட்டுநர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆரன்அடிக்காமலும், அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டிவந்து

வசந்த் வண்டி மீது மோதி இடித்து தள்ளியதில் கீழே விழுந்து இருவருக்கும் அடிப்பட்டது என்றும், உடனே நானும், எனது அண்ணனும் அவர்களை தூக்கி பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து தமிழ்செல்வன் அப்பாவிற்கு தகவல் சொன்னோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசுதரப்பு சாட்சியத்திலிருந்து விலகி, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**- இல்லை